**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.320/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | **திருமதி. சோபியா** |
| Father's Name/Husband Name: | | **திரு. அருண்குமார்** |
| Village | : | பெரம்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 31/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர், எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் சாப்ட்வேர் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். எதிரிகள் வினோத்குமார், அனிதா, தவமணி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோரைத் தெரியும். நான் சென்னையில் உள்ள செயின்ஜோசப் Institute of Technology ல் B.Tech I.T படித்துள்ளேன். நான் கல்லூரியில் படிக்கும்போது, எதிரி வினோத்குமாரும் என்னுடன் அதே கல்லூரியில் படித்து வந்தார். அதில் எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. 2015ம் வருடம் தான் எனக்கும் எதிரி வினோத்குமாருக்கும் பழக்கம் ஏற்பட்டது. நானும் எதிரி வினோத்குமாரும் காதலித்து வந்தோம். எதிரி வினோத்குமாருக்கு பல பெண்களுடன் தொடர்பு இருப்பது தெரிய வந்ததால் 2019ம் வருடம் அவருடன் பழகுவதை நான் நிறுத்திவிட்டேன். நான் என் அம்மாவிடம் மேற்படி விவரத்தை கூறினேன். அதன்பிறகு என் அம்மா என் வீட்டில் மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். நெற்குணம் கிராமத்தில் எனக்கு மாப்பிள்ளை பார்த்து முடிவு செய்து பத்திரிக்கையும் அடித்துவிட்டனர். 13.05.2019 அன்று எதிரி

வினோத்குமார் மாப்பிள்ளை வீட்டிற்கு சென்று, நாங்கள் எடுத்த புகைப்படங்களை காட்டி இந்த பெண்ணை நான் தான் காதலிக்கிறேன் என்றும், திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று சொல்லி திருமணத்தை நிறுத்திவிட்டார். நான் எதிரி வினோத்குமாருடன் பழகுவதை நிறுத்தியவுடன் எதிரி என்னிடம் தன்னை தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், இல்லையென்றால் நாங்கள் இருவரும் சேர்ந்துள்ள போட்டோக்களை வலைதளத்தில் போட்டு அவமானப்படுத்தி விடுவதாக என்னை மிரட்டினார். நான் எதிரி வினோத்குமார் மீது வழக்கு தொடுத்தால் அவரது நண்பர் ராமச்சந்திரன் மூலமாக போட்டோக்களை வலைதளத்தில் போட்டு அவமானப்படுத்திவிடுவதாக என்னை மிரட்டினார். 1வது எதிரியின் அக்காவான அனிதா என் வீட்டிற்கு வந்து 2019ம் வருடம் ஜீன் மாதம் என் வீட்டிற்கு வந்து தேவிடியா மவளே என்று அசிங்கமாக திட்டி தன்னுடைய தம்பிக்கு என்னை கல்யாணம் பண்ணி கொடுக்குமாறு சொல்லி மிரட்டினார். 1வது எதிரி வினோத்குமாரின் நண்பரான ராமச்சந்திரன் எனது அம்மாவிற்கு போன் செய்து நீயெல்லாம் ஒரு டீச்சரா எனது நண்பர் வினோத்குமாருக்கு உங்களது மகளை திருமணம் செய்து கொடுத்திடுங்கள் இல்லையென்றால் போட்டோஸை ஆன்லைனில் போட்டுவிடுவேன் அல்லது கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். எதிரி வினோத்குமாரின் அக்காவான அனிதாவும், தவமணியும் 2019ம் வருடம் எனது அம்மாவிற்கு போன் செய்து உங்கள் மகளை திருமணம் செய்து கொடுத்திடுங்கள் இல்லையென்றால் உங்கள் மகளை தூக்கிச்சென்று கொலை செய்துவிடுவோம் என்று சொல்லி மிரட்டினார்கள். இதனால் நான் எதிரிகள் மீது நான் பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் அளித்த புகார் மனுவுடன் எனக்கு திருமணம் செய்தவற்காக அச்சடிக்கப்பட்ட திருமண பத்திரிக்கையின் நகலை நான் போலிசாரிடமும் கொடுத்துள்ளேன். அந்த **திருமண பத்திரிக்கையின் நகல் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ( எதிரியின் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) . திருமண பத்திரிக்கை நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை தான் 1வது எதிரி நிறுத்திவிட்டார். நான் அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல்நிலை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரி வினோத்குமாரும், நானும் பெரம்பலூர் செங்குணம் பகுதியில் உள்ள ஜோசப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஒன்றாக படித்தோம் என்றால் சரிதான். பட்டப்படிப்பும் நாங்கள் இருவரும் ஒரே கல்லூரியில் தான் படித்தோம் என்றால் சரிதான். கல்லூரி படிப்பை முடித்துவிட்டு நானும் 1ம் எதிரியும் ஒரு வீடு எடுத்து தங்கி தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தோம் என்றால் சரியல்ல. எனது அம்மா 1ம் எதிரியை தனது மகன் என்றும், என்னை தனது மகள் என்றும் கூறி மேற்கண்ட வீட்டை வாடகைக்காக குடி வைத்து 2 1/2 வருடம் நாங்கள் இருவரும் ஒன்றாக தங்கி வேலை பார்த்தோம் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா மகன் விஜய் என்றால் சரிதான். எனது பெரியப்பா மகன் விஜய் 2019ம் வருடம் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு வந்து எங்கள் இருவரையும் பார்த்து தவறாக நினைத்துக் கொண்டு எனது அம்மாவிடம் கூறி என்னை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. அதன்பிறகு 1வது எதிரிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. புகாரை நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. எனது புகாரில் கடந்த 17.05.2019 என்ற தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த தேதியில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு தமிழ் படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். எனது புகாரில் எனது தாயார் எனக்கு மாப்பிள்ளை பார்த்து 20.06.2019 அன்று திருமணம் நிச்சயம் செய்து விட்டார்கள் கல்யாணப்பத்திரிக்கையும் அச்சடிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபரம் தெரிந்த 1ம் எதிரி கடந்த 13.05.2019ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட மாப்பிள்ளை மற்றும் அவரது வீட்டார்களிடம் எனது போட்டோக்களை காண்பித்து என்னைப்பற்றி பலவிதமாக அசிங்கமாகயும், அவதூறாக பேசியும் மேற்படி கிராமத்தில் பலருக்கு போட்டோக்களை காண்பித்தும் திருமணத்தை நிறுத்த ஏற்பாடு செய்துவிட்டார் என்று எனது புகாரில் வழக்கிற்காக ஜோடித்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரில் 1ம் எதிரி பல பெண்களுடன் தொடர்பு கொண்டு பல பேரை ஏமாற்றிய விபரம் யார் மூலமாக எந்த தேதியில் தெரிந்து கொண்டேன் என்று போலிசார் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி வினோத்குமார் செல்பி போட்டோக்களை வலைதளத்தில் போட்டு

அவமானப்படுத்தப்போவதாக என்னை மிரட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 1ம் எதிரி மிரட்டியது எந்த தேதியில், எங்கு வைத்து எத்தனை மணிக்கு மிரட்டினார் என்று புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ராமச்சந்திரன் என்பவர் எனது அம்மாவிற்கு எந்த நெம்பரிலிருந்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு போன் செய்தார் என்ற விபரத்தை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லியது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் போன் நெம்பரை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்தை என் அம்மாவிடம் கூறி நான் அழுதேன் என்று போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த இடத்தில், எத்தனை மணிக்கு எனது அம்மாவிடம் மேற்கண்ட சங்கதிகளை சொல்லி அழுதேன் என்று போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அனிதாவும், தவமணியும் எந்த செல் நெம்பரிலிருந்து எந்த செல் நெம்பருக்கு போன் செய்து மிரட்டினார்கள் என்று போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த இடத்தில், எத்தனை மணிக்கு 1ம் எதிரி என்னை கடத்தி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார் என்று குறிப்பிட்டு போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் அசல் திருமண பத்திரிக்கையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அசலை தான் கொடுத்தோம். இந்த திருமண பத்திரிக்கையை வழக்கிற்காக ஜோடித்து தாக்கல் செய்திருக்கோம் என்றால் சரியல்ல. 17.05.2019 ம் தேதி புகார் கொடுத்த அன்றே போலிசார் விசாரணை செய்தார்கள் அதன் பிறகு என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் சொல்லியது போல் கடந்த 13.05.2019ம் தேதி எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கால தாமதத்திற்கான புகார் அளித்ததற்கான காரணத்தை புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். எதிர் காலத்தில் எனது திருமணத்தில் பாதிப்பு ஏற்படுவதால் முன்கூட்டியே எதிரிகளின் மீது ஜோடித்து பொய்யாக புகார் அளித்து அதற்கு

ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் என்னையோ, எனது அம்மாவையோ மிரட்டவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சி தாமாக முன்வந்து பிரச்சனை நடந்த பிறகு போலிசார் நெற்குணம் சென்று மாப்பிள்ளை வீட்டில் விசாரணை செய்து அந்த விபரத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்று கூறுகிறார்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கூறிய விவரங்களை புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் புகார் கொடுத்த பிறகு தான் போலிசார் மேற்கண்ட விசாரணை செய்தார்கள். போலிசார் யாரை விசாரித்தார்கள் என்று முதல்நிலை சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.